දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල.
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla.

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/05-03/05/2015

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2020.06. 18

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 05/2020

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

<u>நிறைவேற்றுநர் மற்றும் சிரேஷ்ட நிறைவேற்றுநர் சேவை வகுதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அல்லது / மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய விசேட தரம் மற்றும் முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக பட்டப் பின் படிப்பு தகைமைகளை ஏற்புடையதாக்கிக்கொள்ளல்.</u>

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 பிரகாரம் நிறைவேற்றுநர் மற்றும் சிரேஷ்ட நிறைவேற்றுநர் தரங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அல்லது / மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய பட்டப் பின் படிப்பு தகைமைகளை பூர்த்திசெய்ய வேண்டிய தேவைப்பாட்டை பரிசீலனைக்கு எடுத்த பின்னர் நிறைவேற்றுநர் சேவை வகுதியின் தரம் I க்கு பதவி உயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தரொருவரை விசேட தரத்திற்கு பதவி உயர்த்தும் போது பின்வருமாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

I. தரம் I மற்றும் விசேட தரத்தின் பதவி உயர்வுக்காக இரு துறைகளில் பட்டப் பின் படிப்பு தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்குமிடத்து;

| | |
|---|---|
| உத்தியோகத்தர் தரம் I க்கு பதவி உயர்வு பெறுவதற்காக பூர்த்திசெய்த பட்டப்பின் படிப்பின் துறையானது, விசேட தரத்திற்கு பதவி உயர்வுப் பெறுவதற்கு பட்டப் பின் படிப்பு தகைமையைப் பூர்திசெய்ய வேண்டிய துறையாக இருக்குமிடத்து, | அந்த உத்தியோகத்தர் விசேட தரத்திற்கு பதவி உயர்வைப் பெற்றுக்கொள்வதற்கு அந்தத் துறையில் இன்னுமொரு பட்டப் பின் படிப்பு தகைமையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தரம் I க்கு பதவி உயர்வு வழங்குவதற்கு ஏற்புடையதாகவிருந்த தகைமையை விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கும் ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியும். |
| உத்தியோகத்தர் தரம் I க்கு பதவி உயர்வு பெறுவதற்காக பூர்த்திசெய்த பட்டப்பின் படிப்பின் துறையானது, விசேட தரத்திற்கு பதவி உயர்வுப் பெறுவதற்கு பட்டப் பின் படிப்பு தகைமையைப் பூர்திசெய்ய வேண்டிய துறைக்கு ஏற்புடையதாகாத விடத்து, | அந்த உத்தியோகத்தர் விசேட தரத்திற்கு பதவி உயர்வுப் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்திசெய்ய வேண்டிய துறையில் இன்னுமொரு பட்டப்பின் படிப்பு தகைமையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தரம் I க்கு பதவி உயர்வு வழங்குவதற்கு ஏற்புடையதாகவிருந்த தகைமையை விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியாது. |

II. உத்தியோகத்தரொருவரது பட்டப் பின் படிப்பு தகைமையை அடிப்படை தகைமையொன்றாகக் கொண்டு சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள விடத்து தரம் I க்கு மற்றும் விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டப் பின் படிப்பு தகைமைக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி பட்டப் பின் படிப்பு தகைமையை அல்லது அதற்கு மேலான தகைமையொன்றைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

III. தரம் I க்கு மற்றும் விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள துறையொன்றில் பெற்றுள்ள பட்டப் பின் படிப்பு பட்டம், ஆட்சேர்க்கும் சந்தர்ப்பத்தில் அடிப்படைத் தகைமையொன்றாகக் கருதி ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பில் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பில் விசேடமாக குறிப்பிடப்படாத விடத்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னர் உத்தியோகத்தர் தரம் I க்கு மற்றும் / அல்லது விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்வதற்காக வேறு துறையொன்றில் ஏற்புடைய பட்டப் பின் படிப்பை பூர்த்திசெய்ய முடியும்.

IV. இந்தச் சுற்றறிக்கை நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்டுள்ள தொடர் இலக்கம் III இன் கீழுள்ள ஏற்பாடுகளை இயைபுடையதாக்கிக்கொள்ள முடியுமான உத்தியோகத்தரொருவருக்கு அந்த உத்தியோகத்தர் வேறு பட்டப் பின் படிப்பு தகைமையொன்றை பூர்த்திசெய்திருப்பின் அல்லது பதிவுசெய்திருப்பின் தொடர் இலக்கம் III இன் பிரகாரம் வேண்டுகோளொன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

V. மேற்படி தொடர் இலக்கம் III மற்றும் IV பிரகாரம் உத்தியோகத்தரொருவரால் சமர்ப்பிக்கப்படும் அத்தகைய வேண்டுகோள், அந்தப் பட்டப் பின் படிப்பை ஏற்புடையதாக்கிக்கொள்வது தொடர்பில் உரிய திணைக்களத் தலைவரின் மற்றும் அமைச்சின் செயலாளரின் அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

VI. இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு பாதகம் ஏற்படாத வண்ணம் இந்த சுற்றறிக்கை வெளியிடப்படும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ஒப்பம் : எம்.ஏ.பீ. தயா செனரத்

செயலாளர்

அரசாங்க சேவை ஆணைக்குழு